**கவனிக்க**.-2019.02.15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2112 - 2019 පෙබරවාරි මස 22 වැනි සිකුරාදා - 2019.02.22

*2112 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 470 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 487 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மாச்சு மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

467-B 81498-5,403 (2019/02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவி – யாழ்ப்பாணம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்குகுறையாதவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, பங்குனி 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, சனவரி 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | உடுவில் | வலி தெற்கு பிரிவில் மேலதிக விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ்) | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம். |
| யாழ்ப்பாணம் | உடுவில் | ஏழாலை பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வலி தெற்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ்) | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம். |

2-641

## இலங்கைப் பாராளுமன்றம்

### புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தொடர்பாடல் திணைக்களத்திற்கான பதவி வெற்றிடங்கள்

அண்மைய வருடங்களில் இலங்கைப் பாராளுமன்றத்தின் பணி எளிதில் அணுகப்படக்கூடியதாகவும் வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும் மாறியுள்ளது. பாடசாலை சிறுவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் பாராளுமன்றத்தை ஒவ்வொரு வருடமும் பார்வையிடுகின்றனர். பாராளுமன்றத்தின் புதிய நிலையியற் கட்டளைகளின் நிறைவேற்றத்துடன் குழு முறைமையானது குறுகிய காலத்தில் ஸ்தாபிக்கப்படவுள்ள பல புதிய குழுக்களுடன் விரிவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள் பாராளுமன்றத்தின் பணிபற்றிய அதிகளவு கவனத்தை ஈர்க்கக் கூடிய பொதுமக்களின் கருத்துக்களையும் பங்குபற்றுதலையும் வரவேற்கும்.

தகமையுள்ள தொழில்வாண்மையாளர்களைக் கொண்டமைந்த புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தொடர்பாடல் திணைக்களம், பாராளுமன்றம் பற்றிய உயர் தரத்திலான தகவல்களை இலங்கை மக்களுக்கு பயனுறுதிமிக்கதாக தெரிவிக்கப்படுவதை உறுதிசெய்வதால் பொதுமக்களுடனான வெளித்தொடர்பு எண்ணக்கரு உறுதிப்படுத்தப்படுகின்றது.

எனவே, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் தொடர்பாடல்கள் திணைக்களத்தில் உள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு கோரப்படும் அனுபவமும் தேவையான கல்வித் தகைமைகளுமுடைய பொருத்தமான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தொடர்பாடல் பணிப்பாளர் பதவி (ஒப்பந்த அடிப்படையில்) வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

**தொழில் விபரம்:**

விண்ணப்பதாரர், ஊடகங்கள், பார்வையாளர் சேவைகள், பொதுமக்கள் தொடர்புகள், பிரபல்யப்படுத்தல் (|Brand marketing) விளம்பரம் செய்தல், டிஜிட்டல் /சமூக ஊடகம் மற்றும் சாதன ஆக்கங்கள் அடங்கலான தொடர்பாடல் துறைகள் முழுவதற்கும் தொடர்பாடல் உபாயத்தை திருத்தியமைத்து வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

அவர் :

- ஈடுபாட்டிற்கான வாய்ப்புகளை இனங்கண்டு தொடர்பாடல் திட்டங்களை வடிவமைத்து ஊடகங்களின் விபரத்தையும் பிரசன்னத்தையும் முன்னாயத்துடன் முகாமைத்துவம் செய்வார்.
- உள்ளக பாராளுமன்றப் பணியாட்டொகுதியுடனும் வெளியகப் பங்கீடுபாட்டாளர்களுடனும் மிகச் சிறந்த தொடர்புகளைக் கட்டியெழுப்பிப் பேணுவார்.
- பொதுமக்கள் அலுவல்கள் மற்றும் பாராளுமன்றப் பணிக்கான திட்டமிடலில் பணியாட்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளிக்கப்படுகின்றனர் என்பதை உறுதிசெய்வதுடன் பாராளுமன்றத்தின் நோக்கங்களை அடைவதற்கு அரசியல் மற்றும் பாராளுமன்றச் சாதனங்களை நாங்கள் பயன்படுத்துவதற்கு புத்தாக்கம் மிக்கதும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதுமான வழிகளை ஆலோசனை செய்வதில் ஆக்கபூர்வமாயிருப்பார்.
- பாராளுமன்ற மேற்பார்வை பற்றிய தனியாள் அனுபவங்களைப் பெற்று பிரதிநிதித்துவப்படுத்தல், சிறந்த சட்டவாக்கம் மற்றும் கொள்கையை விருத்தி செய்தல் மற்றும் இவை பொதுமக்கள் அலுவல்கள் மற்றும் பாராளுமன்ற பணியில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதை உறுதிசெய்வதிலும் தொடர்பாடல் குழுவுக்கும் பரந்துபட்ட ஸ்தாபனத்திற்கும் ஆதரவளிப்பார்.
- தகவல் மற்றும் ஆராய்ச்சியின் உள்ளக மற்றும் வெளியக வழங்குநர்களை முகாமைத்துவம் செய்வதன் மூலம் வள தொடர்பாடல் பணிக்கு உதவுவார்.
- ஏனைய திணைக்களங்களில் உள்ள தொடர்பாடல் நடைமுறைப்படுத்தலுடன் இணைப்புச் செய்யும் 19 பொதுமக்கள் வெளிக்கள அலுவலர்கள் மற்றும் ஊடக அலுவலர்கள், பொதுமக்கள் வெளிக்கள ஒருங்கிணைப்பாளர்/ ஊடக இணைப்பாளர்களுடன் ஊடக முகாமையாளரையும் பொதுமக்கள் வெளித்தொடர்பு முகாமையாளரையும் மேற்பார்வை செய்வார்.
- பொதுமக்களின் கருத்துரைகள், சில பணிகளுக்கான மேலதிக பணி நேரத்தை மட்டுப்படுத்தல் மற்றும் பொதுமக்களுக்கு பரவச் செய்வதற்கான சுருக்கியமைக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் பிரசுரங்களுக்கு அனுமதியளிப்பார்.
- ஏற்பாட்டியல், /(logistics) சந்தைப்படுத்தல் மற்றும் ஊடகங்கள் அடங்கலாக பிரதான நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்வார்.

- வீடியோ நாடகங்கள், மற்றும் நிழற்படங்களை தயாரித்தல் இணையத்தளத்தின் மூலமாக நிகழ்ச்சி மற்றும் ஏனைய பாராளுமன்றச் செயற்பாடுகளை வெளியிடுதல் அடங்கலாக பயன்மிக்க சுற்றுலாக்கள் மற்றும் வெளித்தொடர்புகளை ஆதரித்து வாதாடுவதற்கு தலைமைவகிப்பார்.

- பாராளுமன்ற எல்லைப்பகுதி மற்றும் இலங்கைப் பிராந்தியம் ஆகியவற்றுள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் மற்றும் ஏனைய பணியாட்களுக்கான பார்வையிடுதல் மற்றும் வசதியளித்தல் சேவைகளை இசைவுபடுத்துவார்.

- பாராளுமன்ற பார்வையாளர்கள் நிலையம் மற்றும் நினைவுச் சின்ன விற்பனை நிலையம் ஆகியவற்றை முகாமைத்துவம் செய்வார்.

**ஆள் பற்றிய விபரக் குறிப்பு**

**அத்தியாவசியம்:**

- பாராளுமன்றத்தின் அனைத்து தொடர்பாடல்,வெளித்தொடர்பு, பொது மக்கள் கல்வி மற்றும் ஆக்க நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தொடர்பாடல் திணைக்களத்தின் அங்கத்தவர்களுக்கு தலைமை வகித்தல்.

- பாராளுமன்றத்தின் தொலைநோக்கை அடைந்து கொள்வதற்காக செயல்நுணுக்கத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும், மீளாய்வு செய்வதற்கும் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கும் தொடர்பாடல் திணைக்களத்துக்கு வசதியளித்தல்.

- பாராளுமன்றத்துக்கான ஒரு தெளிவான தொலைநோக்கை விருத்தி செய்வதன் ஓர் அங்கமாக பங்கீடுபாட்டாளர்களின் ஆய்வுமுடிவுகளை பகுப்பாய்வு செய்தல்.

- தொடர்பாடல் திணைக்களத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் தொடர்ச்சியை வசதிப்படுத்துவதற்காக அறிவு முகாமைத்துவ முறைமை ஒன்றைத் தாபித்தல்.

- பாராளுமன்ற நடவடிக்கைகளில் பொதுமக்கள் பங்குகொள்வதற்காக பயனுறுதிமிக்க நுட்பங்களை இனங்காணுவதும் நடைமுறைப்படுத்துவதும்.

- முக்கிய கைத்தொழில் ஊடகங்களுடன் உறவுகளை முகாமைத்துவம் செய்வதும் உறவுகளை கட்டியெழுப்புவதும்.

- ஒழுங்கான தொடர்பாடலை பரப்புவதற்கும் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் வெளித்தொடர்பு சேவைகளை உறுதிப்படுத்துவதற்கும் உள்ளக மற்றும் வெளிவாரி முக்கிய பங்கீடுபாட்டாளர்களுடன் பலமான உறவுகளை கட்டியெழுப்புவதும் பேணுவதும்.

- பொது மக்கள் மற்றும் பாராளுமன்றம் அதேபோன்று பாராளுமன்ற பிரதிநிதிகள் ஆகியவர்களுக்கிடையிலான தொடர்பாடலை கட்டியெழுப்புவதற்கு ஊடாடு மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில் அமைந்த ஓர் ஊடகத்தை முன்னெடுத்தல்.

**தகுதிகள் :**

- சிங்களம் அல்லது தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மிகச் சிறந்த பேச்சு மற்றும் எழுத்துத் திறமைகளைக் கொண்ட பலமான தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடியவரும் தமிழ் அல்லது சிங்கள மொழியைப் புரிந்து கொள்ளக் கூடியவரும்

- தொடர்பாடல் முகாமைத்துவ அனுபவமும் தகுதியும்

- ஆட்களை முகாமை செய்யும் அனுபவம்

- ஏனைய அமைப்புகளுடன் பங்குடமையுடன் பணிபுரியும் அனுபவம்

- பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதனுடன் ஈடுபாடுள்ள மக்கள் ஆகியவர்களின் தேவைகள் பற்றிய ஒரு புரிந்துணர்வைக் கொண்டிருத்தல்

- அதிக அளவிலான பணிகளை நிறைவு செய்வதை உந்துவதற்கான இயலுமையுள்ள ஆக்கபூர்வமான மற்றும் தொலைநோக்குள்ள தலைமைத்துவம்

- விபரங்களை நுணுக்கமாக ஆராய்தல் மற்றும் ஆட்களுக்கு இடையிலான பலமான தொடர்பு மற்றும் உபாய ரீதியான சிந்தனை ஆகிய திறமைகளுடன் கூடிய நிறுவனம் சார்ந்த திறமைகள்

- பாராளுமன்றத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்துடனும் பணிப்பாளருடனும் பயனுறுதிமிக்க முறையில் தொடர்பாடலை மேற்கொள்ளும் அதே நேரம் சுயாதீனமாகவும் சிறு குழுவாகவும் இருந்து பணிபுரிவதற்கான இயலுமை
- செயல்நுணுக்க மற்றும் தொழிற்பாட்டு தீர்மானங்களை மேற்கொள்ளும் அனுபவம்
- அரசியல் ரீதியில் நடுநிலைமையாக இருப்பதற்கான இயலுமை
- சமத்துவம் மற்றும் பல்லினத்தன்மை விழுமியங்களுக்கு அமைய பணிபுரிவதற்கான அர்ப்பணிப்பு
- கற்பதற்கும் தன்னை விருத்திசெய்துகொள்வதற்குமான நெகிழ்வுத்தன்மையான ஓர் அணுகுமுறையும் விருப்பமும்
- இணையத்தளம் வீடியோ மற்றும் பிரதித் தொகுப்பு (Copy Editing) திறமைகளுடன் தகவல் தொழில்நுட்ப மற்றும் சமூக ஊடக அறிவு

**வயதெல்லை :**

ஏற்புடையதல்ல, எனினும் விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது 45 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் .

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்:**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் இருந்து வெகுசன தொடர்பாடலில் அல்லது சந்தைப்படுத்தலில் ஒரு முதுமாணிப் பட்டத்துடன் சந்தைப்படுத்தல், வெளித்தொடர்பு விருந்தினர் மற்றும் தொடர்பாடல் தலைமைத்துவ வகிபாகங்களுடன் குறைந்தது ஐந்து வருட அனுபவம் ;

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் இருந்து வியாபார முகாமைத்துவ (சந்தைப்படுத்தல்) இளமாணிப் பட்டம், வியாபார நிர்வாக இளமாணிப் பட்டம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவ இளமாணிப் பட்டம், கலைமாணிப் பட்டம் (தொடர்பாடல் வெகுசன தொடர்பாடல், பொதுமக்கள் உறவுகள் மற்றும் ஊடக முகாமைத்துவம், தொடர்பாடல் மற்றும் ஆக்கபூர்வ கலைகள் மற்றும் சமூகவியல் என்பன ஒரு பாடமாக), விருந்தோம்பல் மற்றும் பொழுதுபோக்கு முகாமைத்துவ இளமாணிப் பட்டம்,ஊடகவியல் இளமாணிப் பட்டத்துடன் சந்தைப்படுத்தல், வெளிக்கள நடவடிக்கை விருந்தினர் மற்றும் தொடர்பாடல் தலைமைத்துவ வகிபாகங்களுடன் குறைந்தது பத்து வருட அனுபவம்;

அல்லது

3. சந்தைப்படுத்தல், வெளித்தொடர்பு விருந்தினர் மற்றும் தொடர்பாடல் தலைமைத்துவ வகிபாகங்களுடன் இருபது வருட அனுபவம்.

சந்தைப்படுத்தல், வெளித்தொடர்பு விருந்தினர் மற்றும் தொடர்பாடல்கள் தலைமைத்துவ வகிபாகங்கள் ஆகியவற்றில் இருபது வருடங்கள் தொழில்வாண்மை சேவைகள் (ஊடகம் தொடர்பாடல்கள் அல்லது பத்திரிகைத் துறையில் அண்மைக் கால அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**தெரிவு செய்யும் முறை:**

கல்வித் தகைமைகள், தொழில் வாண்மைத் தகைமைகள் மற்றும் விடயத்துடன் தொடர்புடைய அறிவு, துறையில் அனுபவம், தொடர்பாடல் திறன்கள் மற்றும் விண்ணப்பதாரிகளின் ஆளுமை ஆகியவற்றினை பரிசீலிப்பதற்காக பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நேர்முகம் காண்பவர்களைக் கொண்ட சபையினால் நடத்தப்படும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை மூலம்.

**சம்பள அளவுத்திட்டம்:**

ஒப்பந்த காலப்பகுதியில் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2016 ஆம் இலக்க உரிய தொழிலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக குறைந்தபட்சம் ரூபா 1,35,000 மாதாந்த சம்பளம் வழங்கப்படும்.

**ஏனைய நலன்கள்:**

தனிப்பட்ட தூரம் வரையறுக்கப்பட்ட பூரண பராமரிப்புக்குட்பட்ட வாகனம்.

**சேவை நிபந்தனைகள்:**

ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்குப் பொருத்தமான ஆள் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இக்காலப்பகுதியில் திணைக்களத்தின் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களும் செயலாற்றுகையும் அடையப்படுவதைக் கொண்டு அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட காலப்பகுதியினை நீடிப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

2. **ஊடக முகாமையாளர் பதவி.**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01.**

**தொழில் விபரம்:**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி,

குரல் செவிமடுக்கப்படுவதையும் தெளிவானதும் ஒத்திசைவுமிக்கதுமான குரலில் அதன் பெயர் பதிக்கப்படுவதையும் உறுதிப்படுத்தி, பாராளுமன்ற ஊடக நிலையத்தின் தொழிற்பாட்டை உபாயமார்க்க நெறிப்படுத்தலையும் முகாமைத்துவம் செய்ய வேண்டும்.

அவர் :

- உபாயத்திட்ட ஊடக உறவை வடிவமைத்து செயற்படுத்துவார்;
- ஊடகத் திட்டத்தின் ஈடுபாடு மற்றும் வடிவமைப்புக்கான வாய்ப்புக்களை அடையாளம் காணக் கூடியவராக இருப்பார்;
- வருடாந்த அறிக்கைகளின் , இணையத்தளத்தின் மற்றும் வலைப்பதிவுகளின் ஆசிரியராகச் செயற்பட வேண்டும்;
- அஞ்சல் மற்றும் இலத்திரனியல் செய்திகளை மேற்பார்வை செய்தல் ;
- பாராளுமன்றத்தில் உள்ள ஆய்வுகள் மற்றும் நிபுணர்களின் கட்டுரைகளைப் பொறுப்புரிமையளித்தலும் பதித்தலும் ;
- தபால் மற்றும் இலத்திரனியல் அஞ்சல்களின் மேற்பார்வை செய்பவராக இருப்பார்;
- இணையத்தளம் மற்றும் வலைப்பதிவு ஆகியவற்றின் உருவாக்கம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக ஏனைய திணைக்களங்களுடன் பணியாற்றுபவராக இருப்பார்;
- சமூக ஊடகப் பிரசன்னத்தை முகாமைத்துவம் செய்து விரிவுபடுத்தல், பாராளுமன்றத்தில் செய்தியாகப் பரப்பத் தகுதி பெற்ற தகவல் மூலமாகச் செயற்பட்டு அவற்றைப் பகிர்பவராக இருப்பார்;
- ஊடகத்தினூடும் செல்வாக்குமிக்கவர்களுடனும் நிறுவனங்களுடனும் பாராளுமன்றத்தின் தோற்றப்பாட்டினை மேம்படுத்துவார்;
- பத்திரிகை அறிக்கைகள், கட்டுரைகள் மற்றும் கூற்றுக்களைத் தயாரிப்பவராக இருப்பார்;
- ஏனைய குழு உறுப்பினர்களின் தொடர்பாடல் திட்டங்கள் மற்றும் கூற்றுக்களின் வரைபினை மேற்பார்வை செய்து ஆலோசனை கூறுபவராக இருப்பார்;
- பொதுமக்களுக்குப் பாராளுமன்றம் ஆற்றும் பணிகள் பற்றிய புரிந்துணர்வை வழங்குவதற்கு திணைக் களங்களுக்கிடையில் பணியாற்றுபவராக இருப்பார்;
- தொடர்பாடல்களின் சகல அம்சங்களையும் காலாண்டு அடிப்படையில் பகுப்பாய்வு செய்து முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு ஓர் அறிக்கையினைத் தயாரிப்பவராக இருப்பார்.

**ஆள் பற்றிய விபரக்குறிப்பு**

**அத்தியாவசியம் :**

- ஊடக முகாமைத்துவத்தில் அனுபவம்
- அதிசிறந்த தொடர்பாடல் திறன்கள், எழுத்துமூலமான மற்றும் வாய்மொழி மூலமாக நிரூபிக்கப்பட்டவை:

- தொடர்பாடல் பிரச்சாரத்தினை முகாமைத்துவம் செய்வதில் அனுபவம்:
- ஏனைய நிறுவனங்களுடன் பங்குடைமையுடன் பணியாற்றுவதில் அனுபவம்:
- சுயாதீனமாகவும் சிறு அணி ஒன்றின் அங்கமாகவும் பணியாற்றுவதற்கான ஆற்றல்:
- பயனுறுதியான சமர்ப்பணங்களை வழங்குவதற்கான ஆற்றல்:
- கற்றலுக்கும் விருத்திக்கும் நெகிழ்வுத் தன்மை மிக்க அணுகுமுறையும் ஆர்வமும்:
- சமூக ஊடகங்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாட்டு நுட்பங்கள் பற்றிய தெளிவான அறிவு:

**தகுதிகள்:**

- தொடர்பாடல்கள் ஆலோசனை மற்றும் விநியோகம் ஆகியவற்றினை வழங்குவதன் மூலம் மிகப் பிரபலமான வெகுசன ஆளுமை அத்துடன் /அல்லது நிறுவனத்தின் தொடர்பாடல் குறிக்கோள்களுக்கு ஆதரவு வழங்குவதில் குறிப்பிடத்தக்க அனுபவம்:
- தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் ஊடகத்துடன் பணியாற்றிய முன்னேற்பாடான மற்றும் எதிர்வினைமிக்க ஊடகத் திட்டமிடல் மற்றும் விநியோகம் தொடர்பான வெற்றிகரமான கடந்த கால வரலாறு:
- மிகப் பிரபலமான நிறுவனம் ஒன்றிற்காக ஊடகக் கட்டுரைகள், செவிப்புல மற்றும் கட்புலத் தயாரிப்புகள், இணைய வழி உள்ளடக்கங்கள் மற்றும் ஏனைய எழுதப்பட்ட ஆவணங்களை வரைவதில் அனுபவம்:
- பாராளுமன்றத்தின் தொடர்பாடல் உபாய விநியோகத்திற்குப் பங்களிப்பு வழங்குவதற்கான ஆற்றல்:
- பாராளுமன்றம் மற்றும் அது இயங்கும் அரசியல் சூழல் பற்றிய சிறந்த புரிந்துணர்வைக் கொண்டிருத்தல்:
- பத்திரிகை மற்றும் ஊடக அணியின் அசாதாரண வேலை நேரங்களைக் கொண்ட அச்சு ஊடகச் சேவையின் ஓர் அங்கமாக இருப்பதற்கான விருப்பம்:
- வாய்மூலமான மற்றும் எழுத்து மூலமான அதிசிறந்த தொடர்பாடல் திறன்கள்:
- நிர்வாகம், பாராளுமன்றம் மற்றும் புறப் பங்கீட்டாளர்களின் சகபாடிகளுடன் செயற்திறன் மிகு முறையில் பணிபுரியும் ஆற்றலுடனான உறுதியான குழு பணியாளர்.
- அரசியல் ரீதியாகப் பக்கச் சார்பற்றவராக இருப்பதற்கான ஆற்றல்:
- Microsoft Office Suite மென்பொருள் பயன்படுத்துவதில் அனுபவம்:

**வயதெல்லை:**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 40 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றின் கட்புலக் கலைப்பட்டத்துடன் இதே துறையில் பத்து வருட தொழில் ரீதியான அனுபவம்.

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றின் கலைப்பட்டத்துடன் (தொடர்பாடல், வெகுசனத் தொடர்பாடல், பொதுமக்கள் உறவுகள் மற்றும் ஊடக முகாமைத்துவம் தொடர்பாடல் மற்றும் ஆக்கக் கலைகள், சமூகவியல் மற்றும் அரசியல் விஞ்ஞானம் ஆகியவற்றை ஒரு பாடமாக கொண்டு) இதே துறையில் பத்து வருட தொழில் ரீதியான அனுபவம்)

அல்லது

3. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றின் ஊடகவியல் பட்டத்துடன் இதே துறையில் பத்து வருட அனுபவம்.

(பத்திரிகைத் துறை அல்லது வெகுசனத் தொடர்பாடல் ஆகியவற்றில் அண்மைக் கால அனுபவம் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**தெரிவு செய்யும் முறை:**

கல்வித் தகைமைகள், தொழில் ரீதியான தகைமைகள், மற்றும் விடயத்துடன் தொடர்புடைய அறிவு, துறையில் அனுபவம், தொடர்பாடல் திறன்கள் மற்றும் விண்ணப்பதாரிகளின் ஆளுமை ஆகியவற்றைப் பரிசீலிப்பதற்காக பாராளுமன்றச செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நேர்முகம் காண்பவர்களைக் கொண்ட சபையொன்றின் மூலம் நடத்தப்படும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை மூலம்.

**சம்பள அளவுத் திட்டம் :**

2016.11.07ஆந் திகதிய 06/2016 முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபத்தின் அட்டவணை 1 இற்கு அமைய, இப்பதவிக்காக குறித்துரைக்கப்பட்ட மாதாந்தச் சம்பள அளவு ரூபா 58,295-3 × 1,335 - 8 × 1,630 - 2 × 2,170 - ரூபா 79,680 ஆகும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மேற்படி முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கு அமைய ஆரம்பத்தில் மாதாந்த சம்பளப் படிநிலை ரூபா 52,255 இல் அமர்த்தப்படுவார்கள். (அனைத்துப் படிகளுடனும் ஆகக் குறைந்த ஆரம்ப மொத்த மாதாந்த ஊதியம் அண்ணளவாக ரூபா 1,10,000.00 ஆக இருக்கும்).

3. **பொதுமக்கள் வெளித்தொடர்பு முகாமையாளர் பதவி (Public Outreach Manager)**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை- 01.**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கைப் பாராளுமன்றத்தில் புதிதாக மீள்கட்டமைக்கப்பட்ட பொதுமக்கள் வெளித்தொடர்புக் குழுவை வழிநடத்த வேண்டும்.

அவர் :

- உலகெங்கிலும் இருந்து வரும் விருந்தினர்களைப் பாராளுமன்றத்திற்கும் புதிய விருந்தினர் நிலையத்திற்கும் வரவேற்பவராக இருப்பார்:
- அகத்தூண்டுதல் அளிக்கும் சுற்றுலாக்களையும் பொது ஈடுபாட்டுச் செயற்பாடுகளையும் வழங்குவதற்கு எமது பாராளுமன்றத்தின் விருந்தினர் உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பவராக இருப்பார்:
- சுற்றுலாக்கள் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல் உள்ளடங்கலாக குழுவின் நாளாந்த தொழிற்பாடுகளை முகாமைத்துவம் செய்பவராக இருப்பார்:
- இலங்கைப் பிரசைகள் வெளிநாட்டு விருந்தினர்கள் மற்றும் பிரதான நீரோட்ட அரசியலில் இருந்து விலகியுள்ளவர்கள் உள்ளிட்ட சகல விருந்தினர்களுக்கும் அர்த்தபுஷ்டியும் செழுமையும் மிக்க விஜய அனுபவங்களை வழங்குபவராக இருப்பார்:
- நிகழ்வுகள் முதல் பேச்சுக்கள் மற்றும் சுற்றுலா உள்ளடக்கம் வரை சகல பொது ஈடுபாட்டுச் செயற்பாடுகளுக்கும் ஆதரவு வழங்குபவராக இருப்பார்:
- விருந்தினர் நிலையத்தில் மாதிரிப் பாராளுமன்றம் மற்றும் அர்த்தபுஷ்டிமிக்க செயற்பாடுகளை நிறுவுபவராக இருப்பார்:
- விருந்தினர் நிலையத்தில் இடைக்காலப் பாராளுமன்ற அரும் நூதன சாலையை நிறுவுபவராக இருப்பார்:
- தொடர்பாடல் உபாயமார்க்கத்தினை நினைவுச் சின்ன விற்பனை நிலையம் வலுப்படுத்துவதை உறுதிப்படுத்துபவராக இருப்பார்:
- மரபொழுங்குச் செயற்பாடுகளுடன் நாளாந்த ஒத்திசைவினை உறுதிப்படுத்துபவராக இருப்பார்:
- மரபொழுங்கினால் பயன்படுத்தப்படும் உத்தியோகபூர்வ பரிசுகளுக்குப் பாராளுமன்றப் பரிசுப் பொருள் நிலையத்தினால் தரமான பரிசுப் பொருட்களை வழங்கக் கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துபவராக இருப்பார்:
விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் மண் அளவையாளர்/தொழில்நுட்பவியலாளர் ஆகிய பதவிகளின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளை

யுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.03.22 என்பதுடன் பரீட்சை 2019, யூன் மாதம் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| பதவியின் பெயர் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| 01 மண் அளவையாளர் | 02 |
| 02 தொழில்நுட்பவியலாளர் | 01 |

2.1 **திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல் :**

2.1.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2019.03.22 ஆந் திகதிக்கு விண்ணப்பதாரிகளின் வயது 18 இற்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2001.03.22 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் மற்றும் 1989.03.22 ஆந் திகதி அல்லது அதற்குப் பின் பிறந்த திகதிகளை உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.)

2.1.2 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அடிப்படை கல்வித் தகைமைகளையும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும்.

| பதவிக் குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 2.1.3 கல்வித் தகைமைகள் | | 2.1.4 தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | க.பொ.த. (சா. த.) | க.பொ.த. (உ. த.) | |
| 1 | மண் அளவை யாளர் | சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமை சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். | விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் உட்பட மொத்தம் மூன்று விஞ்ஞான பாடங் களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி அடைந் திருத்தல் (பொது ஆங்கிலம் பொதுப் பரீட்சை நீங்கலாக) | மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்படும் இரு வருட விவசாய டிப்ளோமா<br><br>அல்லது<br><br>தொழிற்துறையுடன் தொடர்பான தேசிய தொழிற்திறன் (NVQ) 6 மட்டத்திலான தகைமை பெற்றிருத்தல்<br><br>அல்லது<br><br>உயர் கல்வி அமைச்சினாலும் மேற்கூறிய தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிலிருந்தும் தேவையான ஆலோசனைகளைப் பெற்று மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளை சகல வழிகளிலும் சமமானதென மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றிருத்தல். |

| பதவிக் குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 2.1.3 கல்வித் தகைமைகள் | | 2.1.4 தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | க.பொ.த. (சா. த.) | க.பொ.த. (உ. த.) | |
| 2 | தொழில்நுட்ப வியலாளர் | சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி பெற்றி ருத்தல். | பிரயோகக் கணிதம், தூய கணிதம், இரசாயன விஞ்ஞானம், பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் உட்பட மொத்தம் மூன்று பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் (பொது ஆங்கிலம் பொதுப் பரீட்சை நீங்கலாக) | கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் உரிய துறையில் தொழிற் தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>(i) மொரட்டுவை பல்கலைக் கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா<br><br>அல்லது<br><br>(ii) தேசிய தொழிற்திறன் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா<br><br>அல்லது<br><br>(iii) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப் பட்ட பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா<br><br>அல்லது<br><br>(iv) இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா<br><br>அல்லது<br><br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியை முறையாக பூரணப்படுத்தியிருத்தல்<br>அல்லது<br><br>(vi) வேலைத்துறைக்கு உரிய தேசிய தொழிற்திறன் (NVQ) 6 மட்டத்தில் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்<br><br>அல்லது |

| பதவிக் குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 2.1.3 கல்வித் தகைமைகள் | | 2.1.4 தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | க.பொ.த. (சா. த.) | க.பொ.த. (உ. த.) | |
| | | | | (vii) உயர்கல்வி அமைச்சினாலும் மேற்கூறிய தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களினதும் தேவையான ஆலோசனை களைப் பெற்று மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளை சகல வழிகளிலும் சமமானதென மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப சான்றிதழை பெற்றிருத்தல். |

2.1.5 **ஏனைய தகைமைகள்**.- அனைத்து விண்ணப்பதாரிகளும் கீழ்க்குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ளமை அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;
* ஏதாவதொரு மதப் பிரிவொன்றில் குருக்களாகக் கடமையாற்றும் எவரும் இப் பரீட்சைக்கு தோற்ற தகைமை பெற மாட்டார்கள்;
* நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்காக பொருத்தமான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அலுவலர் அனைத்துத் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரம் சேவையில் ஆட்சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படும்.

4. இலங்கை தொழில்நுட்ப சேவை வகுதிக்கமைய வெற்றிட எண்ணிக்கை 03 இற்கு குறைவாகையால் திறந்த மட்டத்தில் மட்டுமே ஆட்சேர்த்துக் கொள்ளப்படும். மேலும் ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

**சம்பளமும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையும்**.-

சம்பளக் குறியீட்டு இலக்கம் : MN 03/2016
சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 ஆகும்.

2020.01.01 வரையான சம்பள ஏற்றங்கள், கொடுப்பனவுகள் என்பன பொது நிருவாக சுற்றுநிருபம் 3/ 2016 இன் ஏற்பாடுகளுக்கமைய செலுத்தப்படும்.

III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற 3 வருடங்களுக்குள் முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும், II ஆம் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு 3 வருடங்களுக்குள் இரண்டாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் 1 ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 05 வருடங்கள் முடிவதற்குள் முகாமைத்துவம் தொடர்பான மூன்று வருட பயிற்சியில் பாட நெறியிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அரசகரும மொழி அல்லாத மொழி ஒன்றில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட

அலுவலர் ஒருவர் தகுதி காண் காலத்தினுள் விதிக்கப்பட்ட அரசகரும மொழி தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும். பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சியினை பொ. நி. சு. 1/2014 இன் திருத்தத்திற்கமைவாக பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளாமை அல்லது வினைத் திறன்காண் தடைதாண்டிப் பரீட்சையில் குறித்த காலம் பகுதிக்குள் சித்தியடையாமை எதிர்கால சம்பள ஏற்றம் தள்ளிப்போடப்படுவதற்குக் காரணமாக அமையலாம்.

5. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனை :**

(i) இப்பதவி ஓய்வூதியத்துடனானதாகும். உங்களுக்குரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள், அநாதைகள ஓய்வூதியத் திட்டத்திற்கு/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) 1930/ 12 ஆம் இலக்க 2015.09.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டு தற்போது செயல்வலுவிலுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விண்ணப்பத்தை A4 (21செ. மீ. x 29 செ. மீ.) அளவுடைய தாளொன்றை உபயோகித்து அதன் இரு பக்கங்களிலும் அமையுமாறு இலக்கம் 1 முதல் 3 வரை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 4 முதல் 6 வரை இரண்டாம் பக்கத்திலும் 7 முதல் 10 வரை மூன்றாம் பக்கத்திலும் அடங்குதல் வேண்டும். உரிய தகவல்கள் தமது சொந்தக் கையெழுத்தினால் குறிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தயாரிக்கும்பொழுது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பப்படிவங்களும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவுறுத்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் (Photo state) பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரம் பரீட்சை அறிவித்தல்களில் குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமைந்துள்ளனவா என விண்ணப்பதாரி பரிசீலனை செய்து பார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(ஆ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2019.03.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், "விவசாயப் பணிப்பாளர் நாயகம், நிருவாகக் கிளை 01, விவசாயத் திணைக்களம், தலைமை அலுவலகம், பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2017-(2019) மண் அளவையாளர்/தொழில்நுட்பவியலாளர்" எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரி ஒருவருக்கு ஒரு பதவிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். ஒரு பதவிக்கான பரீட்சைக் கட்டணம் 600.00 ரூபா ஆகும். அப்பணத்தை விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 057-1001-7-902-7204 கணக்கில் நாடு பூராகவுமுள்ள எந்த ஒரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் எதிர்காலத்தில் பயனளிக்கும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் காசுக் கட்டளை, முத்திரை என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஊ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவமொன்று தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமாகக் கிடைத்தமை தொடர்பாக திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(எ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க பதவியொன்றை வகிக்கும் விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர், பிரதேசத்தின் கிராம சேவை அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி ஒருவர், பிரசித்த நொத்தாரிசு முப்படைகளின் பதவி நிலை அலுவலர், அரசாங்க மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஏ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

7. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையுடைய, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி, நகரம் அத்துடன் விண்ணப்பிக்கும் பதவி, விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தியும், ஏற்புடையதான திணைக்களத் தலைவரின் சான்றிதழையும் கொண்டு, முறையாகப் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரிகள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சை அதிகாரிக்கு தமது கையொப்பம் உறுதிசெய்யப்பட்ட பரீட்சை அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது. பரீட்சை அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதாவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளதாகக் கருதப்படலாகாது.

(ஆ) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே அதுபற்றிய பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக பத்திரிகைகளிலும் திணைக்கள வெப் தளத்திலும் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதியுடன் பதிவுத் தபாலிலிட்ட பற்றுச்சீட்டையும் அத்துடன் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், உமது பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியே இருப்பவர்கள் மேற்கூறிய விபரங்களுடன் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தமது தொலைநகல் (Fax) இலக்கத்தையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் (Fax) மூலம் அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்பட மாட்டாது.

(ஈ) **ஆளடையாளம்**.- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காகக் கீழ்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

(உ) **பாடப்பரப்பு :**

(i) *விவேகப் பரீட்சை*.- (1 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள்.
பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான பல்தேர்வு சுருக்க விடை கோரும் 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தியின் விவசாயத்தின் பங்களிப்பு இலங்கை காலநிலை வலையங்கள் பற்றிய அறிவு.

(ii) *விடயம் சார்ந்த அறிவு* (2 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள்.

பரீட்சார்த்தியின் விடய அறிவை மதிப்பிடுவதற்கான கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்ட வினாத்தாளாகும்.

| பதவி | தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு |
|---|---|
| 01 மண் அளவையாளர் | இலங்கையின் மண் வகைகளும், அவற்றின் பரவலும்/ மண் தயாரிப்புக்கு வழிவகுக்கும் காரணிகள், மண் விபரங்களை கண்டறிதல்/வரைபட அளவீடுகள்/ இலங்கையின் நிலப் பயன்பாட்டின் தற்போதைய முறைகள்/ வன அழிப்பின் விளைவுகளும் சூழல் பிரச்சினைகளும்/ உரப் பயன்பாடு/ பயிர் வேறுபாடுகள்/ மண் நீர் பாதுகாப்பு |
| 02 தொழில்நுட்பவியலாளர் | வெல்டிங்/ தொழிற்சாலை வேலை/ தச்சு வேலை/ இயந்திரவியல் தொழிலகம்/ தட்டு வேல/ கத்தி வெட்டும்வேலை/ பொருட்களின் கணக்கீட்டு பண்புகள்/ மோட்டார் இயந்திரவியல் /மின் பொறியியல்/இயந்திரகூடம்/பாதுகாப்பு முறைகள்/ படிப்பிக்கும் முறைகள் |

(ஊ) *மொழி மூலம்.-* இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(எ) பரீட்சை நடத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மேற்கொள்ளும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கும் ஆளாக நேரிடலாம்.

(ஏ) *பரீட்சை நடைபெறும் இடமும் திகதியும்.-* இப்பரீட்சை 2019, யூன் மாதம் கொழும்பிலும் கண்டியிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து கொழும்பில் மாத்திரம் பரீட்சையை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும். (விண்ணப்பித்த நகரத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| பரீட்சை நிலையம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 1 |
| கண்டி | 2 |

8. **ஆட்சேர்ப்பு முறை :**

(i) மேற்கூறிய பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பட்டியலை விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படுவதுடன் பரீட்சைக்கு தோற்றிய அனைவருக்கும் தனித்தனியாக அறியத் தருவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk வெப்தளத்தில் வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்ககளம் நடவடிக்கை எடுக்கும்.

(ii) மேற்கூறப்பட்ட பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 40% அல்லது அதற்கு அதிகமாக பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியல் ஊடாக தெரிவு செய்யப்படுவர்.

(iii) விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் இப்பரீட்சையின் புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரியின் தகைமைகளைப் பரீட்சித்து தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்கள் மாத்திரம் வெற்றிடத்துக்காக தேர்வுசெய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

(iv) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

(v) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் தகைமைகள் பூரணப்படுத்தப்படவில்லை என நேர்முகப் பரீட்சையின்போது தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத் தன்மை நிராகரிக்கப்படும்.

(vi) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூரணப்படுத்தப்படாமலேயே பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்தாலும் நேர்முகப் பரீட்சைக்காக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் எவ்வித அறிவித்தலுமின்றி அவரது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(vii) விண்ணப்பதாரி ஒருவரால் வழங்கப்பட்ட தகவல் பிழையானதெனப் பின்னர் தெரியவருமிடத்து அவர் வேண்டுமென்றே ஏதும் தகவல் ஒன்றை மறைத்துள்ளார் எனத் தெரியவருமிடத்து அவருக்கு நியமனம் ஒன்றை வழங்குவது தொடர்பாகக் கவனத்திலெடுக்கப்பட மாட்டாது. அத்துடன் இது இப்பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட பதவி செல்லுபடியற்றதாக்கப்படவோ அல்லது அரச சேவையிலிருந்து நீக்கப்படவோ காரணமாகலாம்.

(viii) பரீட்சை பெறுபேறு வெளியிடல் - ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேல் பெற்று சித்தியடையும் பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியலொன்று விவசாயத் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதியுடன் நேர்முகப் பரீட்சைக்காக வெளியிடப்படும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரி இறுதி முடிவெடுப்பார். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பொதுப் பரீட்சை சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்படுவதற்குக் கடமைப்பட்டுள்ளனர்.

10. மும்மொழிகளிலுமான இவ்வறிவித்தலில் முரண்பாடுகள் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.

(கலாநிதி) டப். எம். டப். வீரகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2019, பெப்புருவரி 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவைப் பதவிகளில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017(2019)**

Application for Open Competitive Examination for Recruitment to Vacancies the Grade III of the Sri Lanka Technological Service in the Department of Agriculture - 2017 (2019)

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்கு தோற்ற உள்ள பரீட்சை நிலையம் :
கொழும்பு - 1
கண்டி - 2

☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி :

மண் அளவையாளர் -1
தொழில்நுட்பவியலாளர் -2

| பதவி | இலக்கம் |
|---|---|
| | |
| | |

(உரிய பதவியையும் இலக்கத்தையும் கூட்டினுள் எழுதவும்.)

1. பெயர் :-

1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் வருமாறு (ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) :----.
(உதா : GUNAWARDHANA H. M. S. K)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்):----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

1.5 தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

2. நிரந்தர முகவரி :-

2.1 ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் :----.

2.2 சிங்களத்தில்/தமிழில் :----.

2.3 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 வதியும் மாவட்டம் :----.

2.5 பிரதேச செயலகப் பிரிவு :----.

3. பால் :

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

4. பிறந்த திகதி :

4.1 ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :
வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

4.3 விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

5. கல்வித் தகைமைகள் (மொழி மூலத்துடன்) :

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சை :

முதல் அமர்வு :
(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) மொழி மூலம் :----.
(iv) பரீட்சை முடிவுகள் :-

| பாடங்கள் | | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரம்) பரீட்சை :

(i) வருடமும் மாதமும் :-------------------------------

(ii) பரீட்சை சுட்டெண் : -------------------------------

(iii) மொழி மூலம் :-------------------------------

(iv) பரீட்சை முடிவுகள் :-

| பாடங்கள் | | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

6. தொழிற் தகைமைகள் :-

| டிப்ளோமா | டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் | சித்தியடைந்த வருடம் | மொழி மூலம் | பரீட்சை சுட்டெண் | டிப்ளோமா செல்லுபடி யாகும் திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கி அல்லது வங்கிக் கிளை :----.

7.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி :----.

7.2 பற்றுச்சீட்டு இலக்கம் :----.

7.3 செலுத்திய தொகை :----.

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளவும்)

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென நான் இத்தால் உறுதிமொழிகிறேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறிய நேர்ந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை பேணி நடப்பதாகவும் இணங்குகிறேன். அத்துடன் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவேன் எனவும், அவ்வாறே நான் விண்ணப்பிக்கும் பதவிகளுக்காக ஒரு விண்ணப்பப்பத்திரத்தை மாத்திரம் அனுப்பி வைப்பதாகவும் உறுதியளிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் ................................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)
திகதி :----.

10. ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் இணைந்திருப்பவர்களுக்காக (தேவையற்றதை கீறிவிடவும்).

மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்காக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உண்டு/ இல்லை எனவும் அவர் இப்பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. அத்துடன் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)
திகதி :----.

2-751

---

**கல்வி அமைச்சு**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின், III ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை -2019 (I)

இலக்கம் 1925/37 மற்றும் 2015.07.28 ஆம் திகதியில் இருந்து அமுலில் உள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை III ஆம் தர உத்தியோகத்தர்களின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019, மே மாதம் கொழும்பில் நடைபெறும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

02. இந்தப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுக்கு விதிமுறைகள் மேற்படி பிரகடனத்தின் உப அட்டவணை iii இன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதி கருதி அப்பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

03. பரீட்சை செயல்முறை – எழுத்துமூலப் பரீட்சை

| பாட இலக்கம் | பாடம் | புள்ளிகள் | நேரம் (மணி) |
|---|---|---|---|
| 01 | பொது முகாமைத்துவம் மற்றும் தாபன செயற்பாடுகள் | 100 | 1 1/2 |
| 02 | நிதி ஒழுங்குகள் | 100 | 1 1/2 |
| 03 | கல்விச் சீர்திருத்தம் மற்றும் கல்விச் சட்டம் | 100 | 02 |
| 04 | ஆங்கில மொழி | 100 | 02 |

04. **பாடத்திட்டம்**

| பாட இலக்கம் | பாடம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| 01 | பொது முகாமைத்துவம் மற்றும் தாபன செயற்பாடுகள் | அரச தாபன விதிக் கோவையின் i,ii,iii.iv.v.vii,viii.ix,xii,xiii. xiv,xxiv,xxvii,xxx மற்றும் xxxi ஆகிய வாசகங்கள் மீது விசேட கவனத்துடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிச் சட்டங்கள் i,iii,iv,v,vi,vii,x மற்றும் xii வாசகத்தின் xii வாசகத்தின் மீது விசேட கவனத்துடன் |
| 02 | நிதி ஒழுங்குக் கோவை | அரச நிதி ஒழுங்குக் கோவையின் 1 ஆம் பகுதியின் i,ii,v,viii,xiv வாசகங்கள் மீது விசேட கவனத்துடன் |
| 03 | கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டம் | பரீட்சார்த்திகளின் கீழ் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர்பில் அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது<br>i. 1972 கல்வி மறுசீரமைப்பு (கல்வியின் புதிய வழிகாட்டல்)<br>ii. 1981 கல்வி வெள்ளைப் பத்திரம்<br>iii. 1992 தேசிய கல்வி ஆணைக் குழுவின் I வது அறிக்கை<br>iv. 1997 புதிய கல்வி மறுசீரமைப்பு<br>v. 1999 தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்பு (ஆரம்ப, இடைநிலை, மற்றும் க.பொ.த.(உ.த) )<br>vi. 1976 இலக்கம் 15 கொண்ட பகிரங்க பரீட்சை (மறுசீரமைப்பு) சட்டத்தினால் மறுக்கப்பட்ட 1968 இலக்கம் 25 கொண்ட பகிரங்கப் பரீட்சைச் சட்டம்<br>vii. 1986 இலக்கம் 28 ஐக் கொண்ட தேசிய கல்வி நிறுவகச் சட்டம்<br>viii. 1986 இலக்கம் 30 ஐக் கொண்ட தேசிய கல்வி நிறுவகச் சட்டம்<br>ix. 1991 இலக்கம் 19 ஐக் கொண்ட தேசிய கல்வி ஆணைக் குழுச்சபை சட்டம்<br>x. 1997 இலக்கம் 32 ஐக் கொண்ட தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபைச் சட்டம்<br>xi. 13 ஆவது சீர்திருத்தத்திற்கு மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பாக 3 வது வாசகம் தொடர்பாக விசேட கவனத்துடன் இலங்கை அரசியல் அமைப்பின் யாப்பு |
| 04 | ENGLISH LANGUAGE | This is to assess the English Language competence of the following subject areas.<br>- **English Grammar:-**<br>Tense and Number, Sentences (simple/compound/complex/ compound complex) Relative clauses,adjectives and Adverb,prepositions<br>- **Communication Skills :-**<br>General Greeting and Introductions, Giving and getting information,Advising, Suggesting and Expressing and Opinions, Telephone skills, Interview skills,Meeting<br>- **Writing skills**<br>Internal modes of communication,Formal correspondence skills, Writing descriptions/Explanation, Summary writing skills,Report writing skills. |

**பி.கு:** பரீட்சார்த்தியினால் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை சித்தியடைவதற்காக அவ்வவ் வினாத்தாள்களிலிருந்து 40% புள்ளிகளை பெற வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு ஒரு தடவையில் ஒரு பாடத்திற்கு அல்லது அதனைவிட மேற்பட்ட எண்ணிக்கைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு** : பட்டம், பட்டப்பின் டிப்ளோமா அல்லது பட்டப்பின் பட்டம் ஆங்கில மொழி மூலம் கற்றிருப்பின் இந்த வினைத்திறன்காண் தடை தாண்டல் கீழ் உள்ள ஆங்கிலப் பாடத்தை சித்தியடையும் தேவையில் இருந்து விடுவிக்கப்படும்.

05. **பரீட்சையின் மொழிமூலம்**

5.1 இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பிறகு மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

5.2 போட்டிப் பரீட்சை மூலமாக அரசாங்க சேவைக்குப் பிரவேசித்த பரீட்சார்த்தியாக இருப்பின் இந்த பரீட்சையின் மொழி மூலமான போட்டிப் பரீட்சையில் தோற்றிய மொழி மூலமும், போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் பிரவேசித்த பரீட்சார்த்தியாக இருப்பின், அப்பரீட்சையின் மொழி மூலமான அரசாங்க சேவையில் இணைத்துக் கொள்வதற்கு தகைமைப் பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் தெரிவு செய்ய வேண்டும்.

5.3 பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழிமூலமாக பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும்.

06. விண்ணப்பப்படிவத்தை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக ஏ4 (A4) அளவுடைய கடதாசியில் இருபுறமும் பாவித்து இலக்கம் 01 தொடக்கம் 05 வரைக்கும் முதலாம் பக்கத்திலும் மிகுதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்தில் மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிட வேண்டும். மாதிரிப் படிவத்திற்கு ஒவ்வாது சரியாக பூர்த்தி செய்யப்படாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவம் முன் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படுவதால், விண்ணப்பப்படிவங்களை முன்னிலைப்படுத்துவதற்கு முன் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு இணைவானதா என்பதும், அனைத்து தகவல்களும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்துப் பார்க்க வேண்டும் அத்துடன் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அவ்விடயங்களை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதா என்பதை பற்றியும் கவனத்திற் கொள்வதோடு விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினை தம்மிடம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

07. இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்றுவதற்கு பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார்.

08. பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள் - விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சைக்குரிய விதிமுறைகளுக்கு அமைய எப்பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்ற பிழையான தகவல்களை எவரேனும் வழங்கியுள்ளதாக தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சை இடம்பெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்போ எந்தவொரு தருணத்திலும் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

09. விண்ணப்பப்படிவங்கள் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இத்தினத்திற்குப் பிறகு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை -2019(I)" எனக் குறிப்பிடப்பட்டு அனுப்ப வேண்டும்.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் கூடியவர்கள் மாத்திரம் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி தினமன்று அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்டுள்ள பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுவதும் விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டதுடன் அது தொடர்பில் குறிப்பிட்டு அறிவித்தல் பத்திரிகை விளம்பரம் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளம் ஊடாக பிரசுரிக்கப்படும். அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை இடம்பெறும் தினத்திற்குக் குறைந்த பட்சம் 02 அல்லது 03 நாட்களுக்குள் தங்களது அனுமதிப் பத்திரம் கிடைக்கவில்லையெனின் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளபடி அது குறித்து பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத்தர வேண்டும். அவ்வாறு அறியத்தரும்போது

விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கப்பட்ட பரீட்சையின் பெயரையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே உள்ளவராக இருப்பின் அதற்குரிய விடயங்களுடன் அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை அனுப்பக்கூடிய பெக்ஸ் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதம் ஒன்றை விளம்பரத்தில் காணப்படும் பெக்ஸ் இலக்கத்திற்கு முன்னிலைப்படுத்தி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்தில் வினவும் சந்தர்ப்பத்தில் தேவை ஏற்படுமாயின் விண்ணப்பதாரியின் எதிர்பார்ப்பை உறுதிப்படுத்துவதற்காக தன்னிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்துவது பொருந்துமாயின் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிலிடும் போது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் தயாராக வைத்துக்கொள்வது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்திற் கொள்ள வேண்டும்.

11. மேற்படி 10 ஆம் பந்தியில் குறிப்படப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தவறும் பரீட்சார்த்தியினால் பிறகு முன்னிலைப்படுத்தப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சை தொடர்பான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். யாதொரு நிறுவனத்தின் மூலமாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரர் தமது ஒப்பத்தை நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தி அனுப்ப வேண்டும். பரீட்சைக்காக தோற்றும் முதலாவது தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட தமது அனுமதிப் பத்திரத்தை முன்னிலைப்படுத்த தவறும் விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

13. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சாட்சிகளை முன்வைப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். அதற்காக,

I. தேசிய ஆளடையாள அட்டை

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

அல்லது

III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

14. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்ற அல்லது பதவியொன்றுக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்திற் கொள்ள வேண்டும்.

15. பரீட்சைக் கட்டணம்.

அ) இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

ஆ) இந்தப் பரீட்சைக் கட்டணமானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரச வருமானக் கணக்கில் வைப்பிடக் கூடியவாறு நாட்டில் உள்ள தபாலகங்கள் / உப தபால் அலுவலகம் அல்லது மாவட்ட / பிரதேச செயலக அலுவலகங்களுக்கு நிதி செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை அதற்குரிய இடத்தில் கழன்று விடாமல் ஒட்ட வேண்டும். மேலும் அதன் போட்டோ பிரதியொன்றினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

இ) பரீட்சைக்கட்டணம் தொடர்பாகக் காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்காக மாற்றப்பட மாட்டாது.

16. பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகளைக் கொண்ட ஆவணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட முறையில் பெறுபேறு ஆவணங்கள் பெற்றுக்கொடுப்பது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட மாட்டாது.

17. பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இயற்றப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்தி உட்படுவார். அந்த விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடற்ற நிலைமைகள் எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

19. இவ் அறிவித்தலின் ஊடாக தழுவப்படாத விடயங்கள் தொடர்பாக கல்வி அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய.
2019, மாச்சு 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் III ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2019 (I)**

**Efficiency Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service 2019 (I)**

விண்ணப்பப்படிவங்கள் " பரீட்சை ஆணையாளர் நாயகம்,ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு நிறுவனத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். (பரீட்சையின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:-

சிங்களம் 2
தமிழ் 3 ☐
ஆங்கிலம் 4
(உரிய இலக்கத்தைக் கூட்டுக்குள் எழுதவும்)

01) (i) முழுப் பெயர் :-(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ..........................................

உ.ம்-HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்னரும் குறிப்பிட்டு பெயர்: (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ....................................

உ.ம்- (GUNAWARDHANA H.M.S.K)

(iii) முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) .......................................................

02) (i) சேவையாற்றும் கல்வியியற் கல்லூரி/ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி /ஆசிரிய மத்திய நிலைய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) அனுமதிப் பத்திரம் இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் : ..............................................
..............................................

(ii) சொந்த முகவரி:- (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) .........................................

03) தொலைபேசி இலக்கம்

(i) கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) நிலையான ☐☐☐☐☐☐☐☐☐☐

04) (i) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பால் நிலை ஆண் - 0
பெண் - 1 ☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டுக்குள் எழுதவும்)

05) அறிவித்தலில் இரண்டாவது வாசகம் (அ) வின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் எடுக்கும் பாடங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

06) (i) பிறந்த திகதி : ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

(ii) பதவிப்பெயர்

07) இதற்கு முன்னர் இந்தப் பரீட்சைக்கு முழுமையாக அல்லது அதிலொரு பகுதிக்கோ தோற்றியிருப்பின் அந்தப் பாடங்களும் தோற்றிய ஆண்டு மற்றும் மொழியையும் குறிப்பிடவும்.

| பாடங்கள் | வருடம் | மொழி | பரீட்சை சுட்டெண் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

08) பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் உரித்தாயின் அதற்குரிய விபரங்கள்

(i) பற்றுச்சீட்டு இலக்கம்........................

(ii) செலுத்தப்பட்ட தபால்/உப தபால் அலுவலகம் ...................................

(iii) திகதி...........................

(iv) செலுத்தப்பட்ட கட்டணம் ..............................

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்

09) மேற்குறிப்பிட்ட விடயங்கள் உண்மையானது எனவும் வர்த்தமானி அறிவித்தலில் 058 ஆவது வாசகத்திற்கு அமைவாக குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலங்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமை இருப்பதாகவும் உறுதி செய்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படுவதாக அறிவிக்கிறேன்.

…..............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி.............................

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.

மேற்படி விடயங்களுக்குரிய பரீட்சார்த்திக்கு இந்தப் பரீட்சைக்குத் தோற்ற தகுதி உள்ளதென்பதையும் வர்த்தமானி அறிவித்தலின் 05 ஆவது வாசகத்திற்கான அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற அவருக்குத் தகுதி உள்ளது என்பதையும் நான் உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விளக்களிக்கப்பட்டதாக/ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

பீடாதிபதியின் / ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபரின் /
மத்திய நிலைப் பொறுப்பாளரின்
கையொப்பமும் பதவிப் பெயரும்
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)
பொருத்தமற்ற வசனத்தை நீக்கி விடவும்.

2-886

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.